# புலமை சொத்துரிமை மற்றும் இஸ்லாமிய சட்ட மூலாதாரங்கள்: ஓர் விமர்சன பகுப்பாய்வு

## Intellectual Property Right and Sources of Islamic Law: A Critical Evaluation

I. Saujan[1] & A.R.M. Mahsoom[2]

[1]Department of Islamic Studies
[2]Department of Arabic Language
Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka
saujaniqbal95@gmail.com, mahsoomzahry92@gmail.com

### Abstract

“Examining the concept of intellectual property in keeping with the Source of Islamic law” This is the main objective of the Study. It is based on the Qualitative research method. The primary data were collected from the sources of Islamic law such as the Qur'an, Sunnah, statements of the Companions, Customs, fatwas of International Islamic Fiqh Academies, and the opinions of Islamic Scholars. In addition to this, secondary sources such as research articles, books, web publications, journals have been collected, analysed via the descriptive method, and enlightened. According to the results of the study, although modern Perceptions of Intellectual property were originated after the 18th century, it came into existence before the arrival of Islam. This has been implemented on the basis of customs. With the advent of Islam, the recognition was given to this right formally during the time of the companions. It is appropriate that these properties are to be subject to protection on the basis of Maslaha Mursala, Qiyas, Customs, and Maqashid shariah. And these kinds of properties have been preserved by the world's leading fatwas groups such as International Islamic Fiqh Academies, Ali Ahmed Mashael - Dubai Department of Islamic Affairs and Charitable Activities and Al Azhar University in Egypt since they were accepted. By imparting knowledge to the students pursuing higher education and those who are being educated in Arabic colleges and the general public in respect of the Shariah compliance of these types of properties, this study could be a starting point for the future research in this field.

**Key Words:** Intellectual Property Right, Sources of Islamic Law, protection of Intellectual property, Maqashid Shariah

### அறிமுகம் (Introduction)

புலமைச் சொத்துகள் என்பது கருத்தியல், சிந்தனை சார் அறிவு மூலதனமாகும். உலக புலமைச் சொத்துக்கள் அமைப்பின் (The World Intellectual Property Organization)

வரைவிலக்கணம் “புலமைச் சொத்துகள் என்பது கண்ணுக்குப் புலப்படாத மூலத்திலிருந்து தோற்றம்பெற்ற தகவல்களின் தொகுதியாகும். உலகின் பல பாகங்களிலும் பிரதி பண்ணப்பட்ட பிரதிகளை மாத்திரம் குறித்து நிற்பதன்று மாறாக அப்பிரதிகளில் உள்ள தகவல்களையும் வேண்டி நிற்கிறது. இவ்வகை சொத்துகளுக்கு ஏனைய சொத்துகளை போன்று சட்ட பாதுகாப்பும் வழங்கப்படுகிறது.” *((WIPO), 2016)* வணிக குறிகள் (Trade Mark), பதிப்புரிமை (Copyright), காப்புரிமை (Patent), வடிவமைப்புக்கள் (Design) மற்றும் நில இயல் குறியீடுகள் (Geographical Indications) போன்றன புலமைச் சொத்துக்களாக குறித்த அமைப்பு அடையாளப்படுத்தியுள்ளது. *((WIPO), 2016)*

இவ்வகைச் சொத்துக்கள் பற்றிய கருத்தியலின் பிறப்பிடம் பண்டைய ரோம் (Rome) நகராக இருந்த போதிலும் 17ஆம் நூற்றாண்டில் பிரித்தானியாவில் இதன் நவீன வடிவம் தோற்றம் பெற்றது. *(H.Malkawi, 2013)* The British Statute of Anne in 1710 மற்றும் The Statute of Monopolies in 1624 என்னும் சட்டவரைபுகள் மூலம் புத்தாக்கங்களைப் பாதுகாக்க மேற்கொண்ட முயற்சியே 19ஆம் நூற்றாண்டில் “புலமைச் சொத்துரிமை பாதுகாப்பு” (Production of Intellectual Property Rights) என்ற சிந்தனை உலகம் முழுவதும் அறிய வழிசமைத்தது. *(H.Malkawi, 2013)* இதனைத் தொடர்ந்து 1883 ஆம் ஆண்டு Paris Convention, 1886 இல் Berne Convention போன்ற சமவாயங்களின் பின் 1967ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை குறித்த உரிமை உலகம் பூராகவும் பாதுகாக்கப்பட வேண்டும் எனும் நோக்குடன் ஒப்பந்தம் ஒன்றின் மூலம் உலக புலமைச் சொத்துரிமை அமைப்பு (World Intellectual Property Organization -WIPO) நிறுவப்பட்டது. மேலும் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி “உலக புலமைச் சொத்து” தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு நினைவுகூறப்பட்டு வருகின்றது. *(H.Malkawi, 2013)* உலக புலமைச் சொத்துப் பாதுகாப்புச் சட்டத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்தும் நாடுகளில் சர்வதேசரீதியில் சீனா முதலிடத்திலும் ஐக்கிய அமெரிக்கா இரண்டாவது இடத்திலும் உள்ளது. *(வூந டுழனெழெ ஸஉாழழட ழக நஉழழெஅஉைள யனெ ிழடவைஉையட ஸஉநைெஉெநஇ 2018)* இலங்கையில் இக் குறித்த சட்டம் “2003ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தின்” (Intellectual Property Act No 36 of 2003) கீழ் பாதுகாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். *(டுநபயட சுநளழரசஉநஇ 2003)* குறித்த உரிமை சட்டப் பாதுகாப்பு பெறுவதற்கு முறையாக சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகக் கொள்ளப்படுவதில்லை. எனினும் உரிமையாளர் விரும்பின் சட்டத்தின் கீழ் பதிவு செய்துக்கொள்ள முடியும். ஒருவர் ஒரு கட்டுரையை எழுதியவுடன் அவருக்கு அக்கட்டுரையில் பதிப்புரிமை இயற்கையாகவே கிடைத்துவிடுகின்றது. இதன் மூலம் சொத்து பாதுகாப்பு வழங்கப்படுவதுடன் ஏனையவர்கள் குறித்த சொத்தைத் தவறாக பயன்படுத்துவது தடைசெய்யப்படுகிறது. புலமைச் சொத்துக்களை பிரதானமாக இருவகைகளாக பிரித்து நோக்க முடியும். அவற்றில் முதலாவது பிரிவு பதிப்புரிமை சார் சொத்துக்கள் (Copyright) மற்றயது தொழிற்துறை சார் சொத்துக்களாகும் (Industrial Property). தொழில்சார்

சொத்துக்களின் கீழ் வணிக குறிகள் (Trade Mark), காப்புரிமை (Patent), வடிவமைப்புக்கள் (Design) மற்றும் நில இயல் குறியீடுகள் (Geographical Indications) போன்றன உள்ளடங்குகின்றன. *((WIPO), 2016)*

இஸ்லாமிய நோக்கில் புலமைச் சொத்துக்களின் தோற்றம் 1442 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். இஸ்லாத்தின் வருகைக்கு முற்பட்ட அறபு சமூகத்திடம் புத்தாக்க வேலைகளுக்கான உரிமைகள் மரபுவழியாக (Customs) பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. இதற்குச் சான்றாக ஜாஹிலியாக்கால கவிதைகள் கவிஞர்களின் உரிமையாக அறபு சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டதுடன் அவ்வுரைமையை தவறாக பயன்படுத்துவது, ஒரு கவிஞரின் கவிதையை இன்னுமொருவர் முன் அனுமதியின்றி பிரதி செய்வது ஒழுங்கீனமான செயலாகவும் பார்க்கப்பட்டது. மேலும் இவ்வுரிமை அவர்களுக்கு உரித்தாக்கப்பட்டிருந்தமையால் சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் மற்றும் உயர் அந்தஸ்தும் வழங்கப்பட்டது. *(ர்.ஆயடமயறநைஇ 2013)* இதற்கு மற்றுமொரு எடுத்துக்காட்டு ஜாஹிலியாக்கால கவிதைகளின் தொகுப்பான ''ஸபுஉ அல்-முஅல்லகாத் (سبع المعلقات)'' என்னும் கவிதைகளில் கவிஞர்களின் பெயர்களுடன் ''உக்காள்'' சந்தையில் மக்கள் முன்னிலையில் வாசிக்கப்பட்டு க.்.பாவில் தொங்கவிடப்பட்டது. இது அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட வெளியீட்டு முறையாகும் (Mode of Publications). மேலும், கவிதைகள் அரசவையிலும், யுத்தகளங்களிலும் படித்துக்காட்டுவதற்கு முன் உரிமையாளரிடம் முன் அனுமதி பெறல், கவிதைகளின் உரிமையாளருக்கு ஒரு தொகை பணம் வழங்கல் போன்ற நடைமுறைகள் இம்மக்களிடம் காணப்பட்டன. *(ர்.ஆயடமயறநைஇ 2013)* இஸ்லாத்தின் வருகையின் பின் குறித்த உரிமை பரந்தளவில் அமுல்படுத்தப்பட்டு வந்துள்ளது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக, கலீபா அபூபக்கர் (றழி) அவர்கள் சில புத்தகங்களை பிரதி எடுப்பதற்காக புத்தக உரிமையாளர்களுக்கு ஒரு தொகை பணத்தை நஷ்டஈடாக கொடுத்த பின் தனது பனியை மேற்கொண்டமையைக் குறிப்பிட முடியும். *(யு. சுயளடயஇ2007)* இக்குறித்த செயல்கள் தற்காலத்தில் உள்ள புலமைச் சொத்துகள் பாதுகாப்புச் சட்டத்துடன் ஒன்றித்துச் செல்கின்றமையினை காண முடிகின்றது. இச்சான்றாதாரங்களை அளவிட்டுப் பார்க்கின்றபோது புலமைச் சொத்துக்கள் என்னும் சொல் இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களில் நேரடியாக குறிப்பிடப்படாவிடினும் குறித்த உரிமையைப் பாதுகாப்பதற்கான அடிப்படைகளை இஸ்லாம் தெளிவாக விளக்கியுள்ளது.

நவீன இஸ்லாமிய சட்டத்துறை வளர்ச்சியில் குறித்த உரிமை தொடர்பாக பல்வேறு வாதங்கள் பலராலும் முன்வைக்கப்பட்டுவருகின்ற சூழலில், இவ்வாதங்களுக்கு பொறுத்தமானதும் அறிவார்ந்ததுமான பிரதிவாதங்களை இஸ்லாமிய மூலாதாரங்களின் துணையுடன் முன்வைப்பது காலத்தின் தேவையாக எழுந்தமையே இவ்வாய்வின் மையமாகும்.

**ஆய்வுப் பிரச்சினை (Research Problem)**

புலமைச் சொத்துக்கள் என்பது ஒருவர் தனது உழைப்பைச் செலுத்தி எவ்வாறு பௌதீக பொருட்களை உருவாக்குகின்றாரோ, அல்லது சேமிக்கின்றாரோ அதே போல் ஒருவரின்

உழைப்பினூடாக அறிவுசார் படைப்புகள் என்பது உருவாக்கப்படுவதாகும். இவ்வாறு உருவாக்கப்படும் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என உலக நாடுகள் உணர்ந்து கொண்டதன் விளைவே 20ஆம் நூற்றாண்டில் புலமைச் சொத்துரிமைச் சட்டம் (Intellectual Property Rights Act) உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தபட்டு வருகின்றது. இலங்கையில் Intellectual Property Act No 36 of 2003 இன் கீழ் குறித்த சொத்துக்கள் பாதுகாக்கபட்டு வருகின்றன. *(Legal Resource, 2003)* இவை இவ்வாறு இருக்க இஸ்லாமிய ஷரீஆவில் குறித்த உரிமை தொடர்பான வழிகாட்டுதல் என்ன? இதனை இஸ்லாமிய ஷரீஆ சட்டவியலில் எவ்வாறு அணுக முடியும்? போன்ற வினாக்களுக்கு தெளிவு வழங்கவேண்டியது காலத்தின் தேவையாக எழுத்துள்ளமையே இவ்வாய்வின் மையமாக நோக்கப்படுகின்றது. இஸ்லாமிய மூலாதாரங்களின் துணையுடன் குறித்த சொத்துக்கள் மீதான உரிமையை உறுதிப்படுத்த இவ்வாய்வு முனைகின்றது.

**ஆய்வு நோக்கங்கள் (Objectives)**

**1. பிரதான நோக்கம்**

புலமைச் சொத்து என்ற எண்ணக்கருவினை இஸ்லாமிய சட்டமூலாதாரங்களின் (Sources of Islamic Law) துணை கொண்டு பரிசீலித்தல்.

மேற்குறித்த பிரதான நோக்கத்தினை நிறைவு செய்யும் வகையில் ஆய்வாளர்களினால் பின்வரும் துணை நோக்கங்கள் வரையப்பட்டன

2. **துணை நோக்கங்கள்-**

2.1. புலமைச் சொத்து என்ற எண்ணக்கருவை மத்ஹப் இமாம்களின் சொத்து பற்றிய வகைப்படுத்தலுடன் புரிந்து கொள்ளல்

2.2. புலமைச் சொத்து குறித்து இஸ்லாமிய சட்ட ஆய்வாளர்களினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை பகுப்பாய்வு செய்தல்

2.3. புலமைச் சொத்து குறித்து சர்வதேச பிக்ஹ் நிறுவனங்களின் மார்க்க தீர்ப்புகளை வியாக்கியானம் செய்தல்

2.4. புலமைச் சொத்துக்களை மகாஷித் நோக்கில் அணுகுதல்.

**ஆய்வு முறையியல் (Research Methodology)**

இஸ்லாத்தில் சொத்துகள் பற்றிய ஆக்கங்கள் மீதான மீளாய்வு, பகுப்பாய்வு முறையை இவ்வாய்வு அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது பண்புசார் முறையில் அமைந்த நூலக ஆய்வாகும் (Library Research). ஆய்வின் மையமான இஸ்லாமிய சட்டமூலாதாரங்கள் அல் குர்ஆன், ஸுன்னா, கவ்லுஸ்ஸஹாபா, உரபு, பத்வாக்கள் மற்றும் இஸ்லாமிய சட்டவியல் அறிஞர்களின் கருத்துக்கள் போன்ற முதல் நிலை மூலாதாரங்களிலிருந்து தரவுகள் பெறப்பட்டன. இவற்றிக்கு மேலதிகமாக இரண்டாம் நிலை தரவுகளான ஆய்வுக் கட்டுரைகள், புத்தகங்கள், இணைய வெளியீடுகள் மற்றும் கட்டுரைகள் பேன்றவற்றிலிருந்தும் சில தகவல்கள் பெறப்பட்டு விபரணப்பகுப்பாய்வு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு பெறுபேறுகள் விளங்கப்படுத்தப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு (Literature Review)**

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தலைப்புடன் தொடர்புடைய ஆய்வுகளைத் தேடலுக்குற்படுத்திய போது உலக அரங்கில் பொதுவான பல ஆய்வுகள் இடம்பெற்றுள்ளமையை அறிய முடிந்தது. இருப்பினும் புலமைச் சொத்துக்களை இஸ்லாமிய சட்டவியல் மூலாதாரங்களின் துணையுடன் தெளிவுபடுத்தக்கூடிய ஆய்வுகள் பற்றாக்குறையாக உள்ளமை ஆய்வாளர்களால் அவதானிக்க முடிந்தது. இவ்வாய்வு இடைவெளியை "புலமைச் சொத்துரிமை மற்றும் இஸ்லாமிய சட்ட மூலாதாரங்கள்: ஓர் விமர்சன மதிப்பீட்டாய்வு" என்ற ஆய்வு பூர்த்தி செய்கிறது. தலைப்புடன் தொடர்புடைய பொதுவான சில ஆய்வுகள் வாசிப்புகுட்படுதப்பட்டன. அவற்றில்,

"Basis of Intellectual Property Protection in Islam and Its Legal Effects", (2016) என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வில் புலமைச் சொத்துக்களை பாதுகாப்பதில் இஸ்லாத்தின் நிலை என்ன? என்பதைக் கண்டறிவதை நோக்காக் கொண்டு ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வு இஸ்லாமிய சட்ட மூலாதரங்களையும், சட்ட அறிஞர்களின் கருத்துக்களையும் உள்ளடக்கிய விபரண ஆய்வாக அமைந்துள்ளது. ஆய்வின் முடிவில் பாரம்பரிய இஸ்லாமிய சட்ட அறிஞர்களிடம் புலமைச் சொத்துக்கள் தொடர்பாக எவ்விதக் கருத்துக்களும் காணப்படாவிடினும் இஸ்லாமிய சட்டவியலின் அடிப்படை சட்ட மூலாதாரங்களான (Fundamental Sources of Islamic Law) அல் குர்ஆன், ஸுன்னா அடிப்படையில் குறித்த சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு தெளிவான ஆதாரங்கள் உள்ளமையைத் தெளிவுப் படுத்தியுள்ளது. இவ்வாய்விலிருந்து ஆய்வின் நோக்கத்தை அடையும் பொருட்டு இஸ்லாமிய சட்ட அறிஞர்களின் கருத்துக்கள் பெறப்பட்டதுடன் ஆய்வின் முறையியலும் பெறப்பட்டது.

"Intellectual Property Rights in Islam: A Perspective, (2013)" இவ்வாய்வு புலமைச் சொத்துக்களைப் பாதுகாப்பதில் மேற்கத்தேய நடைமுறைகளை விட இஸ்லாமிய நடைமுறைகளும், வழிகாட்டுதல்களும் முற்படுத்தப்பட வேண்டியவை என்பதை நிறுவுகிறது. இஸ்லாம் புலமைச் செத்துக்களுக்கு வழங்கியுள்ள முக்கியத்துவத்தை இஸ்லாமிய மூலாதாரங்களில் இனங்காணல் என்னும் நோக்கில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவு இவ்வாய்வின் முடிவுடன் இயைந்து செல்கின்றபோதிலும் ஆய்வு முறையியல், ஆய்வு நோக்கம் மற்றும் ஆய்வுத் தலைப்பு போன்றவற்றில் வேறுபடுகின்றது.

"The Legitimacy of Intellectual Property Rights the Light of Islamic Law (Sunni and shia Fiqh)" என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வில் புலமைச் சொத்துக்கள் பற்றிய ஷரீஆவின் நிலை, குறித்த உரிமையைப் பாதுகாப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் இஸ்லாமிய ஷரீஆவின் வழிகாட்டுதல்களை அடையாளம் காணல் என்னும் நோக்கில் ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆய்வின் பெறுபேறாக, சொத்துக்கள் அனைத்தும் இறைவனுக்குச் சொந்தமானதாக இருக்கும் அதேவேளை இவை ஒவ்வொரு தனி மனிதனினதும் உரிமையுமாகும். மேலும் இவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பு அடியார்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாய்விலிருந்து சில கோட்பாட்டுத் தகவல்கள் பெறப்பட்டன.

"An Introduction of Intellectual Property Rights in Islamic Law, (2019)" புலமைச் சொத்துக்கள் பற்றிய ஷரீஆ சட்டத்தின் நிலையைத் தெளிவுபடுத்துவதுடன் இன்றைய சூழலில் குறித்த உரிமையை உலக நாடுகளில் நிறுவதில் எதிர்நோக்கும் சவால்கள் எவை என்பதனை இஸ்லாமிய ஷரீஆவின் நிழலில் தெளிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டு ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவில் புலமைச் சொத்துக்கள் பற்றிய இஸ்லாமிய ஷரீஆவில் தெளிவான ஆதாரங்கள் எதுவும் நேரடியாக காணப்படாவிடினும் குறித்த உரிமை வழக்காறுகள், பாரம்பரியங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன.

"The Alliance Between Islamic Law and Intellectual Property: Structure and Practice, (2013)" இவ்வாய்வானது இஸ்லாமிய ஷரீஆ சட்டத்தின் கீழ் புலமைச் சொத்துக்களை பாதுகாப்பதன் அவசியத்தைத் தெளிவுபடுத்துவதாக அமைந்துள்ளது. இந்நோக்கினை அடைவதற்கு வரலாற்று நூற்களிலும், இணைய வெளியீடுகளிலிருந்தும் தரவுகள் பெறப்பட்டு விபரிக்கப்பட்டுள்ளது. ஆய்வின் பெறுபேறாக குறித்த உரிமை புதிதாகத் தோற்றியதல்ல இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலும் இஸ்லாத்திற்கு முற்பட்ட ஜாஹிலியாக் காலத்திலும் வழக்காறு முறையில் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது.
இவ்வாய்வுகள் விடயப்பரப்பில் குறித்த இவ்வாய்விற்கு உதவியுள்ளதுடன் நோக்கம், தலைப்பு, ஆய்வுப் பிரச்சினை மற்றும் ஆய்வின் எல்லை போன்றவற்றிலிருந்து வேறுபட்டுகின்றன.

**ஆய்வு முறையியலும் தகவல் சேகரிப்பும் (Research Methodology & Data Collection)**

இவ்வாய்வானது பண்பு சார் (Qualitative) முறையில் அமைந்த நூலக ஆய்வாகும் (Library Research) ஆய்வாகும். இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களான அல் குர்ஆன், ஸுன்னா, கவ்லுஸ்ஸஹாபா, உரபு மற்றும் இஸ்லாமிய சட்டவியல் அறிஞர்களின் கருத்துக்கள் போன்ற முதலாம் நிலை தரவு மூலங்களிலிருந்து தரவுகள் பெறப்பட்டன. மேலும், இவற்றிற்கு மேலதிகமான தரவுகளைப் பெறும் பொருட்டு இரண்டாம்நிலை தரவு மூலங்களான ஆய்வுக்கட்டுரைகள், நூட்கள், இணையதள ஆக்கங்கள், பத்திரிகைகள் மூலமும் தரவுகள் திரட்டப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் குறியீட்டு முறை (Coding Method) மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு விபரண முறையில் விளங்கப்படுத்தப்பட்டுள்ளது.

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும் (Result and Discussion)**

**1. புலமைச் சொத்துக்கள் என்ற எண்ணக்கருவை இமாம்களின் சொத்துக்கள் பற்றிய வகைப்படுத்தலுடன் புரிந்து கொள்ளல்**

பிக்ஹ் அல்-இஸ்லாமியாவில் ''சொத்து'' மற்றும் ''உரிமை'' ஆகிய இரண்டு சொற்களைக் குறிக்க ''மால் (مال)'' மற்றும் ''மில்கிய்யா (ملكية)'' ஆகிய வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன. ''அல் மால் அல்லது அம்வால்'' என்னும் வார்த்தை பொருட்களைக் குறிப்பதுடன் பொருட்களுக்கும் மனிதனுக்கும் இடையிலான சட்டத் தொடர்பை குறிக்க ''அல் மில்கிய்யா'' பயன்படுத்தப்படுகின்றது. *(Azmi, 1995)* இஸ்லாமிய சட்டவியலில் பொருட்கள் (அம்வால்) மூன்று பிரிவுகளாக பிரித்து நோக்கப்படுகின்றது.

1) ‘‘அய்ன்’’ (கண்களுக்குப் புலப்படும் பொருட்கள்)
2) ‘‘தெய்ன்’’ (கடன்)
3) ‘‘மன்பஆஹ் (*manãfi'*)’’ (நுகர்வுரிமை- usufructuary right)

புலமை சொத்துக்கள் அனைத்தும் ‘‘மன்பஆஹ் (*manãfi'*)’’ வகையை சார்ந்த சொத்துக்களாகும். இவ்வகை சொத்துக்கள் பௌதீக உருவத்தை கொண்டிருக்காது. இதன் பயனை மாத்திரம் பயன்படுத்தகூடியதாக இருக்கும். வாடகை ஒப்பந்தம் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். வாடகை ஒப்பந்ததின் போது கட்டிடம், நிலம் முழுமையாக வாடகைக்கு எடுத்துக் கொள்பவருக்கு உரிமையாவதில்லை மாறாக குறிப்பிட்ட தவணைக்காலம் அதன் பயனை மாத்திரமே சொந்தமாக்கிக் கொள்கிறார்.

மத்ஹபுடைய இமாம்கள் நேரடியாக புலமைச் சொத்துகள் என்ற வார்த்தையை பயன்படுத்தாவிடினும் ‘‘மன்பஆஹ்’’ வகையைச் சார்ந்த சொத்துகள் தொடர்பில் கருத்துக்களை பதிவு செய்துள்ளனர். இவற்றை புலமைச் சொத்துகளாக கணக்கிட்டு ஆய்வை நகர்த்துவது பொருத்தமாக அமையும். இமாம் அபுஹனீபா அவர்கள் பௌதீக உருவமுடைய பொருட்களுக்கு மாத்திரம் ‘‘அல் மால்’’ என்ற அந்தஸ்தை வழங்கியுள்ளார். ‘‘மனாபிஹ் *(manãfi')’’* வகையை சேர்ந்த சொத்துக்களை பொருட்கள் என்ற வகைப்பாட்டுக்குள் உள்ளடக்காது அவற்றை வெறுமனே உரிமையாக மாத்திரம் கணக்கிடப்பட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். *(A. Raslan*,(2007)) இதற்கு இவர் முன்வைக்கும் காரணம் ‘‘மனாபிஹ் (*manãfi'*)’’ வகைச் சொத்துக்கள் ஏனைய பொருட்களை போன்று குறிப்பிட்ட காலத்திற்கு குறிப்பிட்ட இடத்தில் சேமித்து வைக்க முடியாமையாகும். எனவே இவ்வகை சொத்துகள் உரிமையாகவே பார்க்கப்பட வேண்டும். மேலும் இவ்வகை சொத்துக்களின் மீது பிற நபர்களின் உரிமை ‘‘இஜாரா (வாடகை) (leasing or contract for service)’’ அடிப்படையில் வழங்கப்படுகின்றது. காரணம் இஸ்லாம் வாடகை ஒப்பந்ததிற்கு வழங்கியுள்ள சட்டத்தை ‘‘கியாஸ்’’ அடிப்படையில் புலமைச் சொத்துக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற தனது கருத்தை முன்வைப்பதுடன் வாடகை ஒப்பந்தம் ஒன்று குறித்த பொருளின் பாவனைக்காக மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்பத்தில் மாத்திரமே குறித்த பொருளின் பயனை பொற்றுக் கொள்வது சாத்தியமாகும் என்ற நிபந்தனையும் இடுகிறார் *(Al-Zaila'ĩ, 2005*) பதிப்புரிமை சொத்துக்களுடன் தொடர்புடைய உரிமைகளை இரண்டு வகைகளாக பிரித்து நோக்குவர் அவை தார்மீக உரிமை (Moralright) மற்றும் பொருளாதார உரிமை (Financial Right) என்பனவாகும். இவற்றில் தார்மீக உரிமை உரிமையாளரின் சொத்தாக இருப்பதுடன் இவ்வுரிமையாளர் மரணமடைந்த பின் 70வருடங்குளுக்கு குறித்த நபரின் வாரிசுகள் வரிசு அடிப்படையில் அச்சொத்தின் உரிமையை பெற்றுக் கொள்கின்றனர். *(Punchihewa, 2016)* இரண்டாவது வகையான பொருளாதார உரிமையே வெளியீட்டாளர்களுக்கும் ஏனையவர்களுக்கும் வழங்கப்படுகின்றது. இவ்வுரிமை வாடகை ஒப்பந்ததில் ஒரு பொருளின் பயனை அனுபவிப்பதற்கு வாடகைப் பணம் செலுத்துவதற்கு ஒப்பானதாக நோக்கப்படுகின்றது. ஏனைய மூன்று இமாம்களிடத்திலும் குறித்த சொத்துகள் ‘‘மன்பஆஹ் *(manãfi')’’* வகையை சேர்ந்த சொத்துக்களாக ஏற்றுக் கொள்வதுடன் இவை ஏனைய சொத்துகளை பாதுகாப்பது

போன்று பாதுகாக்க வேண்டும் என்ற நிலையில் உள்ளனர். எனவே பிக்ஹுல் இஸ்லாமியாவில் பெரும்பான்மை அறிஞர்களின் கருத்தின் அடிப்படையில் புலமைச் சொத்துகள் ஏனைய சொத்துக்களை போன்ற ஒன்றாக கணக்கிடமுடியும். இச்சொத்தினை சொந்தமாக வைத்திருப்பவருக்கு ‘‘மில்கிய்யா’’ என்னும் சொத்துரிமை கிடைக்கப்பெறுகின்றது. இக்கருத்தினை Mawlānā al-Shaykh Fath Muḥammad al-Lakhnawi, Abd al-Ḥayy, Allāmah Shaykh al-Mufti Muhammad Kifāyat Allāh and Allāmah Shaykh Nizām al-Din போன்ற நவீன இஸ்லாமிய அறிஞர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

## 2. புலமைச் சொத்துக்கள் தொடர்பில் இஸ்லாமிய சட்ட ஆய்வாளர்களினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை பகுப்பாய்வு செய்தல்

புலமைச் சொத்துகள் தொடர்பாக அல்குர்ஆன், ஸுன்னா அடிப்படையில் நேரடியான ஆதாரங்களோ அல்லது பாரம்பரிய முஸ்லிம் அறிஞர்களுக்கு (Classical Muslim Scholars) மத்தியில் இது தொடர்பில் தெளிவான உடன்பாடுகளோ காணப்படவில்லை. இது தொடர்பில் நவீன சட்ட அறிஞர்களுக்கு மத்தியில் ஒருமித்த கருத்து காணப்படவில்லை காரணம் அடிப்படை சட்ட மூலாதாரங்களான அல் குர்ஆன் மற்றும் ஸுன்னாவில் நேரடி ஆதாரங்கள் எதுவும் இடம்பெறாமையும், ‘‘இஜ்திஹாத்’’ அடிப்படையில் பத்துவாக்கள் பெறப்பட்டமையுமாகும்.

அல்-தார்னி (Al-Darini -Haqq al-Ibtikar), ஷன்ஹுரி (Sanhuri -Masadir al Haqq and al Wasit Fial Qanun al madani), ஷுகை மஹ்மஸானி (Suhi Mahmasanni -The General Theory of Law of Obligations and Contract Under Islamic Jurisprudence), அல் காபி (Al Khafif -Milkiyyah and Ahkam al Mu’amalah al Shari’iyyah) மற்றும் அல் இபாதி (Al Ibadi -the Comparative analysis of Ownership in the civil and the Islamic laws) போன்ற நவீன அறிஞர்கள் இவ்வகை சொத்துகள் ‘‘அல்மால்’’ என்ற அந்தஸ்து வழங்கியுள்ளதுடன் இதற்கு இவர்கள் முன்வைக்கும் வாதம் குறித்த சொத்து இஸ்லாமிய சட்டத்துறையின் சொத்துவகைக்குள் ‘‘Manfa’ah’’ வகையைச் சேர்ந்தது என்பதாகும். *(Niazi, 2016)* மேலும் இவர்கள் இவ்வகை சொத்துகள் ‘‘மஸ்லஹா முர்ஸலா (Public Interest)’’ அடிப்படையில் நடைமுறைப்படுத்தவும், பாதுகாக்கவும் முடியும் என்பதில் உடன்படுகின்றனர். எனவே இவர்களின் பொதுவான கருத்து புலமைச் சொத்துகள் ஏனைய சொத்துக்களை போன்று கணக்கிடப்பட முடியும் என்பதாகும்.

அல்-கராபி (Al-Qarafi) மற்றும் இப்னு ஹஸ்ம் (Ibn Hazm) போன்ற அறிஞர்கள் இவ்வகை சொத்துகளை ஏற்க மறுக்கின்றனர். இவர்கள் முன்வைக்கும் காரணம், இவ்வகை சொத்துக்களின் ஒரு பிரிவான பதிப்புரிமையை (Copyright) சொத்துக்களுடைய நிலையில் வைத்து நோக்க முடியாது, இதற்கு சட்டபாதுகாப்பு வழங்கவும் முடியாது. காரணம் ‘‘பதிப்புரிமை என்பது ஒரு மனிதனிலிருந்து தோற்றம் பெறக்கூடிய ‘‘எண்ணங்கள் (Ideas), தகவல்களாகும் (Informations)’’ எண்ணங்களுக்கும் தகவல்களுக்கும் சட்ட பாதுகாப்பு வழங்குவதும் அவற்றை உரிமையாக அங்கீகரிப்பதும் சாத்தியமற்றதாகும். இஸ்லாம் வழங்கியுள்ள அறிவு பற்றிய வரையறைக்குள் எண்ணங்களும், தகவல்களும் உள்ளடங்காது.

மேலும் எண்ணங்கள், தகவல்கள் ஆகிய இரு சொற்களும் பரந்த பொருளில் பயன்படுத்தப்படுகின்றன எனவே இவற்றிற்கு பாதுகாப்பு வழங்குவதும் இவற்றை ஓர் உரிமையாக கணிப்பதும் சாத்தியமற்றதாகும்.'' எனக் குறிப்பிடுகின்றார். *(Dr. Khalid Abdullah, 1986)* இருப்பினும் இன்று ''இப்திகார் (ibtikar -intellectual ideas)'' என்னும் வார்த்தை நவீன முஸ்லிம் அறிஞர்களுக்கு மத்தியில் தற்போது பயன்பாட்டில் உள்ளது. இது ''புலமைசார் எண்ணங்களை'' குறிக்கப் பயன்படுவதுடன் இவை சொத்தாகவும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. *(ஷ்ஷிப்இ 2006)*

அல்-கராபி மற்றும் இப்னு ஹஸ்ம் போன்றோரின் வாதம் சரியாக இருப்பினும் உலக புலமைச் சொத்துரிமைகள் பற்றிய சர்வதேச சட்டத்திற்கு இது பொருந்தாது காரணம் புலமைச் சொத்துக்களாக எவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது தொடர்பில் உலக புலமைச் சொத்துகள் அமைப்பின் யாப்பில் அத்தியாயம்- 2 பிரிவு (iii) பின்வருமாறு வரையறை செய்கிறது.

*''புலமைச் சொத்துகள்: இலக்கிய, கலை மற்றும் அறிவியல் படைப்புகள் நிகழ்ச்சிகள், மற்றும் ஒளிபரப்பு, அறிவியல் கண்டுபிடிப்புகள், தொழில்துறை வடிவமைப்பு, வணிக குறி, சேவை மதிப்பெண்கள் மற்றும் வர்த்தக பெயர்கள், பதவிகள் மற்றும் கைத்தொழில், விஞ்ஞான, இலக்கிய அல்லது கலைத்துறைசார்ந்த புலமைச் செயற்பாடுகளின் விளைவாக தோன்றும் அனைத்து உரிமைகளுக்குமான பாதுகாப்பாகும்''. (Abdul Ghani Azmi, 1995)* புலமைச் சொத்துகள் எவை என்பது மேற்குறித்த உறுப்புரையில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன எனவே அல் கராபி மற்றும் இப்னு ஹஸ்ம் போன்ற சட்ட அறிஞர்களின் வாதம் தற்போது நடைமுறையில் உள்ள புலமைச் சொத்துகளுக்குப் பொருந்தாது.

நவீன இஸ்லாமிய சட்ட அறிஞரும் நீதிபதியுமான தாகி உஸ்மானி (Taqi Usmani) அவர்கள் தனது நூலான ''ஹுகூகுல் முஜர்ரதா (Huqūq mujarradah)'' வில் புலமைச் சொத்துக்களை கியாஸ் அடிப்படையில் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த முடியும் என்ற இமாம் அபூஹனிபாவின் கருத்துக்கு வலுச்சேர்கின்றார்.

## 3. புலமைச் சொத்து குறித்து சர்வதேச இஸ்லாமிய பிக்ஹ் நிறுவனங்களினால் முன்மொழியப்பட்ட பத்வாக்கள்

### 3.1. சர்வதேச இஸ்லாமிய பிக்ஹ் அகடமி (International Islamic Fiqh Academy)

சர்வதேச இஸ்லாமிய பிக்ஹ் அகடமி 1988 டிசம்பர் மாதம் 10ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை இடம்பெற்ற மாநாட்டில் புலமைச் சொத்துகள் பற்றிய கூட்டு இஜ்திஹாதை வெளியிட்டது. *(Manto, 2019)* ''வணிக நிறுவனங்களின் பெயர்கள் (Names of Companies), வணிககுறியீடுகள் (Trade Mark), பதிப்புரிமை (Copyright), காப்புரிமை (Patent) போன்றன உரிமையாளரின் சொத்தாக ஏற்றுக் கொள்ளும் பத்வாவை வெளியிட்டதுடன் நிறுவன பெயர்கள், வணிகக் குறியீடுகள் போன்றன குறித்த தொகை பணம் அரசுக்கு வழங்கள், புதிப்புரிமை மற்றும் காப்புரிமை போன்றவற்றின் தார்மீக உரிமை, பொருளாதார உரிமை அவற்றின் உரிமையாளருக்குரிய சொத்தாகும். எனவே இவ்வுரிமைகளை பயன்படுத்த

விரும்புபவர் உரிமையாளரின் முயற்சிக்காக குறித்த தொகை பணம் செலுத்துவதும் ஏற்றுக் கொள்ளத்தக்கது.'' என்ற பத்வாவை வெளியிட்டது. *(Manto, 2019)*

### 3.2. துபாய் இஸ்லாமிய அலுவல்கள் மற்றும் தொண்டு திணைக்களம் (Dubai Department of Islamic Affairs and Charitable Activities)

துபாய் இஸ்லாமிய அலுவல்கள் மற்றும் தொண்டு திணைக்களத்தின் முப்தி ''அலி அஹ்மட் மாஷல் (Ali Ahamed Masheal)'' அவர்கள் புலமைச் சொத்துகள் பற்றிய பத்வாவை வெளியிட்டுள்ளார் ''புலமைச் சொத்துக்கள் தவறாக பயன்படுத்துவதை இஸ்லாமிய ஷரீஆ தடுத்துள்ளது. காரணம் இவை பொதுச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டுள்ளன. இச்சட்ட பாதுகாப்பு மனித முயற்சிக்கான பாதுகாப்பாகும். உரிமையாளரின் அனுமதியின்றி பயன்படுத்துவது இலக்கிய திருட்டாகும்.'' *(Manto, 2019)*

### 3.3. எகிப்து அஸ்ஹர் பல்கலைக்கழகம் (Al Azhar University – Egypt)

அல்-அஸ்ஹர் பல்கலைக்கழக பத்வாக்குழுவின் கருத்து ''இஸ்லாம் இவ்வகை சொத்துக்களை உரிமையாளரின் விருப்புக்கு ஏற்ப வெளியிடும் உரிமையை வழங்கியுள்ளது. இச்சொத்துகள் பிறரால் பிரதிபண்ணப்படல், பயன்படுத்தப்படல் போன்ற செயற்பாடுகள் உரிமையாளரின் முன் அனுமதி இன்றி இடம்பெறக்கூடாது. மேலும் இழப்பீடுகள் வழங்கப்பட்ட பின்னரே இத்தகைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்துடன் கணினி மென்பொருட்கள் (Computer Software) மீதான உரிமை பதிப்புரிமை சட்டத்தின் (Copyright Laws) கீழ் பாதுகாக்கப்படுகின்றது. இதனை இஸ்லாமிய ஷரீஆ அங்கீகரித்துள்ளது. என்ற பத்வாவை வெளியிட்டது. *(Manto, 2019)*

## 4. புலமைச் சொத்துக்கள் பற்றிய மகாஷித் நோக்கு

இஸ்லாமிய சட்டவியலின் நோக்கம் (மகாஷிதுஸ் ஷரீஆ) அடிப்படையில் குறித்த சொத்து தொடர்பாக நோக்குகின்றபோது மகாஷிதுடைய நோக்கங்கள் 5 காணப்படுகின்றன. அவை

1) தீனை பாதுகாத்தல் (Protection of faith or Religious)
2) உயிரைப் பாதுகாத்தல் (Protection of Life)
3) பரம்பரையைப் பதுகாத்தல் (Protection of Lineage)
4) **அறிவைப் பாதுகாத்தல் (Protection of Intellect)**
5) **சொத்தைப் பாதுகாத்தல் (Protection of Property)**

''மகாஸித்'' அடிப்படையில் குறித்த சொத்து இரண்டு விடயங்களுக்குள் உள்ளடங்கும் முதலாவது, அறிவைப்பாதுகாத்தல்: புலமைச் சொத்தின் தோற்றுவாய் அறிவாகும். எனவே இங்கு அறிவைப்பாதுகாத்தல் என்பது ஒருவர் தனது அறிவைக் கொண்டு உருவாக்கக் கூடிய ஆக்கங்கள் அனைத்தையும் பாதுகாப்பதை உள்ளடக்கும். இரண்டாவது, சொத்தைப் பாதுகாத்தல்: புலமைச் சொத்துக்கள் அனைத்தும் உருவாக்கிய மனிதனின் சொத்து என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. எனவே குறித்த சொத்தைப் பாதுகாப்பது ஒவ்வொரு தனிநபரின்

உரிமையாகும். எனவே மகாஷித் அடிப்படையில் புலமைச் சொத்துக்களைப் பாதுகாப்பதும் அவற்றை நடைமுறைப்படுத்துவதும் அவசியமாகும். *(The Objectives of Islamic La w, 2012)*

**கண்டறிதல்கள் (Findings)**

1) இஸ்லாத்திற்கு முற்பட்ட அறபு சமூகத்தில் புத்தாக்க வேலைகளுக்கான உரிமைகள் மரபுவழியாக (Customs) பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன.
2) புலமைச் சொத்துக்கள் தொடர்பாக இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களான அல்குர்ஆனிலோ அல்லது நபி (ஸல்) அவர்களின் ஸுன்னாவிலோ நேரடியான ஆதாரங்கள் எதுவும் இடம்பெறவில்லை.
3) புலமைச் சொத்துக்களின் மீது ஒரு மனிதனுக்குள்ள தொடர்பு பொருளியல் சார் உரிமையாகும் மேலும் இவ்வுரிமையை இஸ்லாம் ஏனைய உரிமைகள் போன்று பாதுகாக்கின்றது.
4) புலமைச் சொத்துக்கள் அனைத்தும் "மன்பஆஹ் (*manãfi'*)" வகையைச் சேர்ந்த சொத்துக்களாகும்.
5) Al-Qarafi and Ibn Hazm போன்ற அறிஞர்கள் புலமைச் சொத்துக்களில் உள்ளடங்கும் பதிப்புரிமைச் சொத்துக்களை (Copyright) சொத்துக்களுடைய தரத்ததில் வைத்து நோக்குவதையும், இதற்கு சட்டப்பாதுகாப்பு வழங்குவதையும் மறுக்கின்றனர்.
6) நவீன சட்ட அறிஞர்கள் குறித்த உரிமை "மஸ்லஹா முர்ஸலா (Public Interest)" அடிப்படையில் நடைமுறைப்படுத்தவும், பாதுகாக்கவும் முடியும் என்பதை ஏற்றுள்ளனர்.
7) இமாம் அபூஹனீபா குறித்த சொத்துக்களை வாடகை ஒப்பந்ததுடன் தொடர்புபடுத்தி கியாஸ் அடிப்படையில் ஏற்றுக் கொள்ள முடியும் என்ற கருத்தில் உள்ளார்.
8) நவீன இஸ்லாமிய பத்வாக் குழுக்கள் குறித்த சொத்துக்களை ஏற்றுக் கொண்டு பத்வாக்களை வழங்கியுள்ளன.
9) மகாஷித் அடிப்படையில் அறிவைப் பாதுகாத்தல், சொத்துக்களைப் பாதுகாத்தல் என்ற வகைக்குள் புலமைச் சொத்துக்களை பாதுகாப்பதும் உள்ளடங்குகின்றது.

**முடிவுரை (Conclusion)**

புலமைச் சொத்துக்கள் என்பது 18ஆம் நூற்றாண்டின் பின் தோற்றம் பெற்ற கருத்தியலாக இருப்பினும் இதன் நடைமுறை இஸ்லாம் தோற்றுவதற்கு முன் அறபு சமூகத்தின் நடைமுறையில் இருந்து வந்த ஒரு வழக்காராகும். இஸ்லாத்தின் தோற்றத்துடன் இவ்வுரிமைக்கு முறையான அங்கீகாரம் ஸஹாபாக்களின் காலத்தில் வழங்கப்பட்டது. குறித்த சொத்துக்களை மஸ்லஹா முர்ஸலா, கியாஸ், உரபு மற்றும் மகாஸித் அடிப்படையில் பாதுகாப்பது பொருத்தமாக அமைவதுடன் உலகின் முன்னணி பத்வாக்குழுக்களும்

இச்சொத்துக்களை ஏற்றுக் கொண்டு பாதுகாத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் ஏனைய பௌதீகச் சொத்துக்களுக்கு வழங்கப்படும் சட்டப் பாதுகாப்பை போன்று இவ்வகைச் சொத்துக்களுக்கும் பாதுகாப்பு வழங்குவதன் மூலம் இன்று இடம்பெறும் இலக்கியத் திருட்டுக்கள் போன்ற உரிமை மீறல்களை தடுப்பதற்கு வாய்ப்பாக அமையும்.

**உசாத்துணைகள் (References)**

2.

Anjum, R. (2019). An Introduction of Intellectual Property Rights in Islamic Law. *Islamic Law & Law of the Muslim World eJournal*, 21-30.

Azmi, A. G. (1995, February 23). *Intellectual Property Laws and Islam In Malaysia.* Retrieved from Queen Mary university of London: www.qmro.qmul.ac.uk

Clack, G. (2006). *Focus on Intellectual Property Rights.* United States of America : U.S. Department of State: Bureau of International Information Programs .

Dr.Yahya A. Muhammad, M. S. (2016). Basis of Intellectual Property protection in Islam and Its Legal Effects. *International Journal Of Humanities and Social Science*, Vol.6, pg.90.

Dr.Yahya A. Muhammad, M. S. (2016). Basis of Intellectual Property protection in Islam and Its Legal Effects. *International Journal Of Humanities and Social Science*, Vol.6, pg.90.

El-Seoudi, A. W. (2012). Intellectual Property Rights in the Light of Islamic Law and Man-Mad Regulations. *journal of the Social Sciences*, Pg.No 23-29.

H.Malkawi, B. (2013). The Alliance between Islamic Law and Intellectual Property: Structure and Practice . *UST Research Online and the University of St.Thomas Law Journal* , 618-649.

Hirimuthugodage, D. (2011 ). Trade Related Intellectual Property Rights (TRIPS) Agreement and the Agriculture Sector in Sri Lanka. *Asia-Pacific Research and Training Network on Trade Working Paper Series, No. 92*, 1-37.

Javaid Iqbal Khan, N. A. (2013). Intellectual Proprty Rights in Islam: A Perspective . *International Journal for Research in Social Science*, 153-162.

M.A.N.chandratilaka. (2017). *Intellectual Property Law.* Colombo: www.casrilanka.com.

Manto, S. H. (2019). Impact of Sharia on Intellectual Property Laws. *United Trademark &Patent Services: International Intellectual Property Attorneys.*, 19-32.

Niazi, D. S. (2016). The Justification of Intellectual Property Rights in Islamic Law . *Global Journal of Arts, Humanities and Social Sciences*, 62-74.

Organization, R. (2002). *Intellectual Property Policy Outline:Strategic Council on Intellectual Property.* Beging, Japan : The National Police Agency, the Ministry of Public Management, Home Affairs, Posts and Telecommunications and the Ministry of Economy, Trade and Industry.

PHILIPS, D. (2009). Essay: An Introduction to the Law of Copyright. *Journal of the University Librarians Association of Sri Lanka. Vol.13 (Issue 1).* , 71-78.

Punchihewa, D. N. (2016). *Intellectual Property in Tourism and Culture in Sri Lanka.* Sri Lanka: The World Intellectual Property Organization (WIPO).

Servaes, P. n. (2006). *Intellectual Property Rights and Communications in Asia.* New Delhi: Sage Publications India Pvt Ltd.

Silva, M. P. (2001). *The Law of Intellectual Property (1895-2001) .* Colombo: Sri Lanka Judges Institute Colombo-12.

Talagala, C. S. (2015). The Doctrine of Fair Use in Sri Lankan Copyright Law: An Overview. *www.academia.edu*, 1-18.

Wanigasekera, A. (2015, February 5). *Enfircement of intellectual Property Rights in Sri Lanka*. Retrieved from www.lawyerissue.com: https://www.lawyerissue.com/enforcement-of-intellectual-property-rights-in-sri-lanka

(WIPO), W. I. (2016). *Understating Industrial Property .* Switzerland: World Intellectual Property Organization.

الشلش, م. (2006). حقوق الملكية الفكرية بين الفقه والقانون. *مجلة جامعة النجاح للأبحاث (العلوم الإنسانية)*, المجلد ٢١.